**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.49
https://ngmtamil.in/

# பண்டையத் தமிழகத் துறைமுகங்களும், பன்னாட்டு வணிகத் தொடர்புகளும் - ஓர் ஆய்வு

**ஜெ. ஸ்ரீதர்**
பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர், மின்னஞ்சல்: sridharkeystar@gmail.com,
அலைபேசி: 8940955997,
முனைவர் **த. பிரபாகரன்**
நெறியாளர், தமிழ்த்துறைத் தலைவர்,
புனித பீட்டர் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், ஆவடி, சென்னை – 54,
மின்னஞ்சல்:Drprabhakarant.tamil@spiher.ac.in, அலைபேசி:9943766642

**ஆய்வுச் சுருக்கம்**

நம் தமிழக நிலப்பரப்பானது பண்டைய காலத்தில் முப்புறமும் கடல் சூழ்ந்த பகுதியாகத் திகழ்ந்துள்ளது. நீண்ட கடற்கரைகளைக் கொண்டு அமைந்த இந்நிலத்தில் பல முக்கியத் துறைமுகங்கள் இருந்துள்ளது. அவ்வகையில் கொற்கை, காவேரிப்பூம்பட்டினம், முசிறி, முதலிய துறைமுகங்கள் பற்றிய தகவல்களையும், அவற்றின் கட்டமைப்பையும் சங்க இலக்கியச் செய்யுள் மற்றும் தொல்லியல் எச்சங்களைக் கொண்டு இக்கட்டுரை ஆய்கிறது. மேலும் அங்கு மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு வணிகத் தொடர்பு ஏற்றுமதி, இறக்குமதி குறித்த தகவல்களையும் இக்கட்டுரை வெளிகொணர்கிறது.

**திறவுச்சொற்கள்**

1. கீழ்திசை மேல்திசை நாடுகள் - கிழக்கு அல்லது கீழை நாடுகள், மேற்கத்திய நாடுகள்
2. பன்னாட்டு வணிகம் - நாட்டின் எல்லையைக் கடந்து பல நாடுகளுக்கு இடையே நடைபெறும் பொருட்களின் பரிமாற்றம்
3. துறைமுகம் - கப்பல்கள் நங்கூரமிட்டு சரக்குகள் ஏற்ற இறக்கவும் பயணிகள் வந்து செல்லவும் உதவும் இடம்
4. கமரா, கொல்சி - பெரிபுளஸ் குறிப்பிடும் காவிரிப்பூம்பட்டினம் கொற்கையின் பெயர்கள்
5. காகந்தி - மணிமேகலை குறிப்பிடும் காவிரிப்பூம்பட்டினத்தின் பெயர்
6. யவனர் - மேற்குப் பகுதியிலிருந்து இந்தியத் துணை கண்டத்திற்குள் நுழைந்த கிரேக்கர்கள்

**முன்னுரை**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பது வணிகமாகும். பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்து மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து இலாப நோக்குடன் மேற்கொள்ளப்படும் ஒரு செயலே வணிகம் எனப்படுகிறது. அத்தகைய வணிகத்தில் மிக முக்கிய இடம் வகிப்பது கடல்சார் வணிகமாகும். பண்டைய காலத் தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாய்மரக் கப்பல்களைக் கொண்டு கடல் கடந்து வணிகம் செய்துள்ளனர். கீழ்திசை நாடுகளுக்கும், மேல்திசை நாடுகளுக்கும் இடையே ஒரு முக்கிய வணிக மையமாகத தமிழகத்தை உருவாக்கியுள்ளனர். இவை அனைத்திற்கும் மிக முக்கிய கருவாக சங்க காலத் துறைமுகங்கள் இருந்துள்ளன. இவற்றைப் பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. அவற்றையும் சில தொல்லியல் மற்றும் கல்வெட்டு சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அத்தகையத் துறைமுகங்களின் கட்டமைப்பும் அங்கு மேற்கொள்ளப்பட்ட வணிகக் காலாச்சாரமும் இக்கட்டுரையில் தொகுக்கப்படுகிறது.

**வரலாற்றுக்கு முந்தைய கால கடல்சார் குறிப்புகள்**

தமிழகத் துறைமுகங்கள் பற்றிய குறிப்புகள் விரிவாக சங்க இலக்கியங்களிலே காணப்படுவதால் அதன் வரலாறு சங்க காலத்திலிருநந்து தான் தொடங்கியுள்ளது எனக் கருதலாம். இருப்பினும் பலவகைத் தொல்லியல் ஆய்வுகள் அடிப்படையில் நோக்கும் போது வரலாற்றுக்கு முந்தைய காலத்திலும் தமிழர்கள் கடல்சார் அறிவு கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது. இந்தியாவின் சிந்து – சரஸ்வதி நதிக்கரைப் பகுதியிலும் மற்றும் மெசபடோமியாவிலும் கண்டெடுக்கப்பட்ட துறைமுகக் கட்டுமானங்கள், வணிகப் பொருட்கள், எழுத்துப் பொறித்த ஆவணங்கள் மேற்கத்திய நாடுகளுடனான, குறிப்பாக சுமேரியா அரப்பா எச்சங்களுடன் கலந்திருப்பதை அறிய முடிகிறது[1]. தமிழகத்தில் சுமார் நாற்பது இடங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலக்கட்டத்தின் பண்பாட்டுக் கூறுகளைக் காண்பிக்கும் பாறை ஓவியங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி மற்றும் விழுப்புரம் மாவட்டம் கீழ்வாலை ஆகிய பகுதிகளில் கிடைக்கப்பட்ட பாறை ஓவியங்களில் நீரில் செல்லத்தக்க சாதனமாக இருக்கும் கப்பல் போன்ற வடிவங்கள் காணப்படுகின்றன.

**சங்க கால முக்கியத் துறைமுகங்கள்**

சங்க இலக்கிய நூல்களின் தொகுப்பான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டில் சில குறிப்பிடத்தக்க நூல்கள் சங்க காலத் துறைமுகங்கள் பற்றியும் கடல்சார் வணிகம் பற்றியத் தகவல்களையும் தருகின்றன. அவ்வாறு சங்க இலக்கியங்களில் காணப்படும் தமிழகத்தின் முக்கியத் துறைமுகங்கள் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவசமுத்திரம் மற்றும் அழகன்குளம் ஆகியன கிழக்குக் கடற்கரை துறைமுகங்களாகவும் முசிறி, தொண்டி ஆகியன மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களாகவும் இருந்திருக்கின்றன என்பதனை அறிய முடிகின்றது. இவை அனைத்தும் கி.மு.3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையில் பன்னாட்டு வணிகத்தின் மையமாகத் திகழ்ந்துள்ளது.

**காவிரிப்பூம்பட்டினம்**

காவிரியாறு சென்று கடலில் சங்கமிக்கும் இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது என்பர். புகார், பட்டினம் என்றும் இந்நகரினை அழைப்பர். பெரிப்ளூஸ் தம் எரித்திரையன்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

கடற்பயணக் குறிப்பில் இந்நகரை ‘கமரா’ என்று குறிப்பிட்டுள்ளார்[2]. மூவேந்தர்களின் ஆட்சியின்போது இது சோழர்களின் துறைமுக நகரமாக விளங்கியுள்ளது. குறிப்பாகச் சோழப் பேரரசன் கரிகாலனின் தலைநகரமாக இந்நகரம் விளங்கியுள்ளது. அச்சமயத்தில் பன்னாட்டு வணிகத்தை மேற்கொள்ளும் துறைமுகப் பகுதியாகவும் இக்காவிரிப்பூம்பட்டினமானது திகழ்ந்துள்ளது. இத்துறைமுக நகரினைப் பற்றிய குறிப்புகள் சில கல்வெட்டுகளிலும், தொல்லியல் ஆராய்ச்சியிலும் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களிலும் காணக் கிடைக்கிறது.

காவிரிப்பூம்பட்டினம் பற்றிய மிகப் பழமையான கல்வெட்டுக் குறிப்பொன்று மத்தியப் பிரதேச மாநிலம் சத்னா மாவட்டம் பர்ஹுத் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மௌரியப் பேரரசர் அசோகர் காலத்து ஒரு பிராகிருத கல்வெட்டில் காணப்படுகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த புத்த தூபிக்கு காகந்தி என்ற இடத்தைச் சேர்ந்த புத்தபிச்சு ஒருவர் கற்பலகை ஒன்று அளித்ததை இக்கல்வெட்டு குறிக்கின்றது. இந்த காகந்தி என்ற பெயர் மணிமேகலைக் குறிப்பிடும் காவிரிப்பூம்பட்டினத்தின் பெயர்களில் ஒன்றாக உள்ளது.

**“………… ….. கூம்பொடு**
**மீட்டாய் களையாது மிசை பாரம் தோண்டாது**
**புகா அர்ப் புகுந்த பெருங்கலம்” - புறம் 30 : 11 – 13**

புகார் துறைமுகமானது உலகத் தரம் வாய்ந்த வணிகத் தலமாக விளங்கியது என்பதும் பெரிய பெரிய பாய்மரங்கள் கட்டப்பட்ட கலங்கள் புகார்த் துறைமுகத்திற்கு வந்து சென்றதும் இந்த புறநானூற்றுச் செய்யுளின் வழி அறிய முடிகிறது. இவ்வாறு சங்க இலக்கியங்கள் மட்டுமன்றி புகார்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கடலகழாய்விலும் எண்ணற்ற பல எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 1960ஆம் ஆண்டு இங்கு மேற்கொள்ளப்பட்ட காந்த அளவியல் ஆய்வில் கட்டிடப் பகுதிகள் புதையுண்டிருந்தமை கண்டறியப்பட்டது. மேலும், புலி, யானை உருவங்கள் பொறிக்கப்பட்ட சோழர் காலச் செப்புக் காசுகள் யவனர் தொடர்புடைய ரூலெட்டட் பானை ஓடுகள், ரோமானிய நாணயங்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன.

மேலையூர் பல்லவனீச்சரம் என்னும் கோயிலுக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புத்தப்பள்ளி புகார் நகர ஆய்வின் மிக முக்கியப் பகுதியாகக் கருதப்படுகிறது. 1991 ஆம் ஆண்டு தமிழக அரசு மேற்கொண்ட கடலாய்வில் 23 அடி ஆழத்தில் ஒரே சீரான வடிவமுள்ள பெரிய கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த கட்டிடப் பகுதி காணப்பட்டது. அதை வைத்து இந்நகர் பிற்காலத்தில் கடல் சீற்றத்தால் அழிந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மேலும் புகார் நகரம் கடல்கோளால் அழியப்பட்டிருப்பது மணிமேலையின் ஒரு செய்யுள் சுட்டுகிறது.

**வானவன் விழாக்கோள் மாநகர் ஒழிந்தது**
**மணிமே கலாதெய்வம் மற்றது பெறாஅள்,**
**“அணிநகர் தன்னை அலைகடல் கொள்க” என**
**இட்டனன் சாபம் : பட்டது இதுவால்** [3]

**கொற்கை**

சங்க கால பாண்டிய மன்னர்களின் இயற்கைத் துறைமுகமாக விளங்கியது கொற்கைத் துறைமுகமாகும். இது தற்போதைய தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்தில்

அமைந்திருந்தது எனலாம். இத்துறைமுகத்தைப் பெரிப்ளுஸ் தம் கடற்பயணக் குறிப்புகளில் 'கொல்சி' என்று குறிப்பிடுகிறார். கொற்கைத் துறைமுகத்தின் மிக முக்கிய வணிகப் பொருளாக விளங்கியது முத்து. இங்கு கண்டெடுக்கப்பட்ட முத்தின் சிறப்பை 'அர்த்த சாஸ்திரம்' கூறுகிறது. உலக அழகி கிளியோப்பட்ரா கொற்கை முத்தை அணிந்ததாக குறிப்பிடப்படுகிறது[4].

**"காண்தொறும் கலுழ்தல் அன்றியும், ஈண்டுநீர்**

**முத்துப்படு பரப்பின் கொற்கை முன்துறை" – நற்றி 23**

**"அலங்கிதழ் நெய்தல் கொற்கை முன்துறை இலங்குமுத்து**

**உறைக்கும் எயிறுகெரு துவர்வாய்" – ஐங்கு 185**

**"இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம் கவர்நடைப் புரவிக் கால்வருத் தடிக்கும்**

**நற்றெர் வழுதி கொற்கை முன்துறை" - அகம் 130**

மேற்கூறிய சங்க இலக்கியச் செய்யுள் வரிகளை நோக்குகையில் கொற்கை நகரமானது முத்திற்கும் முத்து வணிகத்திற்கும் சிறந்து விளங்கியமை நன்கு புலனாகிறது. தாமிரபரணி ஆறானது கொற்கையில் தான் கடலில் கலக்கின்றது. எனவே, அகநானூறு இதனை 'முன்துறை' என்று குறிப்பிடுகின்றது.

**"மறப் போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்**

**கொற்கை அம் பெருந்துறை முத்தின்" - அகம் 27**

மேலும் சங்க காலப் பாண்டிய மன்னர்களான வழுதி, வெற்றிவேல் செழியன் முதலானோருக்கு இந்நகரம் சிறப்புமிகு தலைநகரமாக விளங்கியுள்ளதை அறியமுடிகிறது. கொற்கை நகரின் சிறப்புகள் சங்க இலக்கியங்களில் மட்டுமன்றி பல கள ஆய்வு மற்றும் அகழாய்விலும் வெளிக்கொணரப்பட்டுள்ளது. அவ்வகையில் முதன்முதலில் கொற்கை பகுதியில் ஆய்வு மேற்கொண்டு அதன் வரலாற்றுச் சிறப்புகளை வெளிகாட்டிய பெருமை மத போதகர் கால்டுவெல் என்பவரையே சாரும். பின் தமிழக அரசு தொல்லியல் துறை மேற்கொண்ட ஆய்வுகளில் பானையோடு, மணிகள், அறுக்கப்பட்ட சங்குகள், சங்குப் பாசிகள், கண்ணாடி வளையல்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டன.

**முசிறி**

மேற்கு கடற்கரையில் அமைந்த சேர மன்னர்களின் சிறப்புமிகு துறைமுகமாகக் கருதப்படுவது முசிறித் துறைமுகமாகும். 'பேரியாறு' கடலோடு கலக்கும் இடத்தில் இத்துறைமுகம் அமைந்திருந்தமை அறியமுடிகிறது. 'முசிறிஸ்' என்று யவனர்களும், மரீசிப்பட்டணம் என்று வடமொழியாளர்களாலும் இத்துறைமுகம் அழைக்கப்படுகிறது. கொற்கைக்கு முத்து போல் இங்கு மிளகு ஏற்றுமதியானது பிரசித்திப்பெற்று இருந்துள்ளது. இத்தகவல்களை சங்க இலக்கியச் செய்யுள் வரிகளில் காணமுடிகிறது.

**"யவனர் தந்த வினை மான் நன்கலம்**

**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**

**வளம் கெழு முசிறி" - அகம் 149**

யவனர் தங்கத்தைக் கொண்டுவந்து அதை கைமாற்றி இங்கு விளைந்த மிளகைப் பெற்றுச் சென்றனர் என்பதை இச்செய்யுள் குறிக்கின்றது.

**"கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்**
**பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்" - பதிற்று 8 : 5**

முசிறி பட்டினத்தின் ஒரு பகுதியான பந்தரிலும் கொடுமணத்திலும் முசிறியில் கண்டெடுக்கப்பட்ட முத்துகளும் அங்கு செய்த நகைகளும் விற்கப்பட்டன என்று பதிற்றுப்பத்தின் ஒரு செய்யுள்வரி குறிக்கிறது. கி.மு முதல் நூற்றாண்டைச் சேர்ந்த யவன மாலுமி ஹிப்பாலஸ் அரபு வணிகர்களிடமிருந்து தென்மேற்கு பருவக்காற்றைப் பற்றி அறிந்து அக்காற்றின் உதவியாலேயே கப்பலை முசிறிக்கு ஓட்டிக் கொண்டு வந்தார் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இங்ஙனம் நோக்குகையில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே யவனர்களும், அரவு நாட்டவரும் வந்து வணிகம் மேற்கொண்ட பெருமையை முசிறித் துறைமுக நகரமானது பெற்றிருந்தது என ஐயமின்றிக் கூறலாம்.

**இலக்கியங்கள் சுட்டும் இன்னப் பிற துறைமுகங்கள்**

மேற்குறிப்பிட்டவை மட்டுமன்றி இன்னும் சில முக்கிய துறைமுகங்கள் பண்டைய காலத்தில் தமிழகத்தில் இருந்தது என்பதை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றுள் அழகன்குளம், வசவசமுத்திரம், எயிற்பட்டினம் போன்றவை குறிப்பிடத்தக்கது.

**"பசும்பூன் பீதி மருங்கை அன்னான்" - நற்றி 358**

**"தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்**
**மருங்கூர்ப் பட்டினத்து அன்ன, இவள்" - நற்றி 258**

**"விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்**
**இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து**
**எல்உமிழ் ஆவனத்து அன்ன" - அகம் 227**

இச்செய்யுள் வரிகளில் குறிப்பிடப்படும் மருங்கூர்ப்பட்டினம், 'அழகன்குளம்' என்னும் துறைமுகமே ஆகும். இது இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்த ஒரு பாண்டிய நாட்டுத் துறைமுகமாக இருந்திருக்கலாம் என்று நற்றிணையின் சில செய்யள்களின் வழி அறியமுடிகிறது. பல்லவர்கள் ஆண்ட தொண்டை மண்டலத்தின் மிக முக்கியத் துறைமுகமாகக் கருதப்படுவது மாமல்லபுரம் அருகே அமைந்த வசவசமுத்திரமாகும். இதனை 'நீர்ப்பெயற்று' என்று பெரும்பாணாற்றுப்படைக் குறிப்பிடுகிறது. தற்போது 'மரக்காணம்' என்று அறியப்படும் கடல் சார்ந்த பகுதி முற்காலத்தில் எயிற்பட்டினம் என்னும் துறைமுக நகரமாக இருந்திருக்கிறது என்று அறிய முடிகிறது.

**"ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட**
**வைகுறு மீனின், பையத் தோன்றும்**
**நீர்ப்பெயற்று எல்லைப் போகி பாற்கேழ்" - பெரும் 315**

**"மணி நிர் வைப்பு மதிலொடு பெயரிய**
**பணிநீர்ப படுவடிவற் பட்டினம்" - சிறு 156**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இவற்றின் வரிசையில் மற்றொரு முக்கியத் துறைமுகப் பட்டினமாக விளங்குவது தொண்டி. தொண்டி என்பது தற்போதைய இராமநாதபுரம் அருகில் உள்ள ஓர் ஊர் என்றாலும், பெரிப்ளூஸ் குறிப்பின் படி இது சேர நாட்டுத் துறைமுகமாக இருந்திருக்கலாம் என்று எண்ண முடிகிறது.

**"வண்டுஇமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கன்**

**உரவுக் கடலொலித் திரைபோல" - ஐங்கு 172**

**"வெண்கோட்டு யானை விறற்போர்க் குட்டுவன்**

**தெண்திரைப் பரப்பின் தொண்டி முன்துறை" - அகம் 290**

மேற்குறிப்பிட்டுள்ள செய்யுள் வரிகள் தொண்டி என்பது துறைமுக நகரம் என்பதையும், வஞ்சியை ஆண்ட சேரன் செங்குட்டுவனே அதனை ஆண்டவன் என்பதையும் பதிவு செய்கின்றன.

**துறைமுகங்களின் கட்டமைப்பு**

மேற்குறிப்பிட்ட பண்டைய காலத் துறைமுகங்கள் யாவும் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பைக் கொண்டிருந்தன. கலங்கரை விளக்கம், பண்டக சாலைகள், வெளி நாட்டவர் குடியிருப்புகள் முதலியன அமைந்திருந்தது என்று சங்க இலக்கியக் குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது.

**"இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்" - சிலம்பு 6: 141**

**"இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி**

**உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்**

**துறைமிறக்கு ஒழியப் போகி கறைஅழக்" – பெரும் 350**

இரவு நேரங்களில் கடலில் கலங்களிலும், படகுகளிலும் வருவோர்கள் ஐயமின்றி கரைசேர ஏதுவாக உயரமான கலங்கரை விளக்கங்கள் துறைமுகங்களில் அமைக்கப்பட்டிருந்ததை மேற்கூறியச் செய்யுள்கள் குறிக்கின்றன.

**"நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்,**

**அளந்தறியாப் பலபண்;டம்" - பட்டி 130**

**"வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப,**

**நெய்தல் சான்ற வளம்பல பயின்றாங்கு" - மதுரை 325**

பன்னாட்டு வணிகர்கள் வந்து வணிகம் செய்ய உதவும் வகையில் துறைமுகங்களில் விரிவான பண்டகசாலைகள் அமைக்கப்பட்டிருந்துள்ளது. மேலும் அவர்கள் தங்கி வணிகம் மேற்கொள்ளும் வகையில் தங்குவதற்கான இடங்களும் சிறப்புற அதை;திருந்தமை அறிய முடிகிறது.

**"பயனற வறியா யவனர் இருக்கையும்**

**கலந்தரு திருவிற் புலம் பெயர் மக்கள்**

**கலந்தினி துறையும் இலங்கு நீர் வரைப்பும்" – சிலம்பு 5: 10 – 12**

**"மொழிபல பெருகிய பழிநீர் தேளத்துப்**

**புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்**

**முட்டாச் சிறப்பிற் பட்டினம்" – பட்டி 216**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இத்தகைய சங்க இலக்கியக் குறிப்புகளைக் கூர்ந்து நோக்குங்கால் பண்டையத் தமிழகத் துறைமுகங்கள் பன்னாட்டு வணிகத்தை செழிப்புற மேற்கொள்ளும் வகையில் உலகத் தரம் வாய்ந்து திகழ்ந்திருந்தன என்று துணியலாம்.

**பன்னாட்டு வணிகத் தொடர்பு**

பண்டையத் தமிழர்களின் கடல் சார்ந்த பன்னாட்டு வணிகத் தொடர்பை சில கல்வெட்டுக் குறிப்புகளின் வழியும், சங்க இலக்கியங்களின் சில செய்யுள்களின் வழியும் புலனாகிறது. உலகிலேயே மிகப் பழமையான எழுத்துச் சான்றுகளில் ஒன்றாகக் கருதப்படும் ஈபுரு மொழி விவிலியத்தில் சாலமன் மன்னனுக்கு தோகை, யானை மருப்பு, மணப் பொருள்கள் ஆகியவை விற்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளன. ஆவை யாவும் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டவையே என்று முனைவர் அ.தட்சிணாமூர்த்தி தம் நூலில் குறிப்பிடுகிறார்[5]. எகிப்தில் உள்ள குவாசிர் அல் - காதிம் என்ற செங்கடல் துறைமுகத்தில் கி.பி முதல் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன. இத்துறைமுகமானது ரோம் நாட்டுனான வணிகத்திற்கு இந்தியா போன்ற கடல்சார் நாடுகளுக்கு ஒரு மிக முக்கிய சந்திப்பாக திகழ்கிறது. அங்கு கண்டெடுக்கப்பட்ட பானை ஓட்டில் கண்ணன், சாத்தன் என்ற தமிழ்ப் பெயர்கள் காணப்படுகின்றன. இதே சாத்தன் என்னும் பெயர் பொறித்த பானையோடு அரிக்கமேடு பகுதியிலும் மதுரை மாவட்டம் விக்கிரமங்கலம், முத்துப்பட்டி போன்ற பகுதியிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**"ஏமூர் சாத்தன் ஆதன்" (விக்கிரமங்கலம்)**

**"நாகபேரூர் அந்தை சாத்தன் (முத்துப்பட்டி)**

பொதுவாக தமிழில் சாத்தன் என்னும் பெயர் வணிகர், வணிகக்குழு என்பவர்களையே குறிக்கும். சிலப்பதிகாரத்தில் கோவலனின் தந்தை வணிகர் மாசாத்துவன் என்று குறிப்பிடப்படுவதை ஒப்பு நோக்கலாம். இக்கல்வெட்டு குறிப்புகளை நோக்குகையில் தமிழர்கள் வணிக நிமித்தமாக கடல் கடந்து சென்றனர் என்பதை அறியலாம். மேலும் திருப்பரங்குன்றம், அழகர்மலை ஆகிய ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகளில் வணிகன் என்ற சொல் மிகுதியாகக் காணப்படுகிறது.

இவ்வாறு கல்வெட்டு மட்டுமன்றி சங்க இலக்கியங்களிலும் பன்னாட்டு வணிகம் தொடர்பான பல குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. பாண்டி நாட்டு துறைமுகத்தில் முத்து, சங்கு, பலவகைத் தானியங்கள், மீன்கள், உப்பு என்று பல பொருட்கள் செழிப்பாக ஏற்றுமதி செய்யப்பட்டதை மதுரைக் காஞ்சியின் ஒரு செய்யுள் விளக்குகின்றது[6]. மேலும் பண்டைய கால மக்கள் பன்னாட்டு வணிகர்களிடம் இருந்து எவற்றையெல்லாம் ஏற்றுமதி, இறக்குமதி செய்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக பட்டினப்பாலையின் ஒரு செய்யுள் சில குறிப்புகளை வழங்குகின்றது.

**"இருங்கழிச் செறுவின் தீம்புளி வெள்உப்புப்**
**பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்**
**கொழுமீன் குறைகிய துடிக்கண் துணியல்" – மதுரை 315**

**"நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்களி மூடையும்" – பட்டி 185**

சங்க இலக்கியங்களை ஆழ்ந்து நோக்குகையில் பண்டைய தமிழர்களோடு சிறப்பான வணிகத் தொடர்பு வைத்திருந்த பன்னாட்டவர்களுள் அரபு தேசத்தவரும், யவனர்களுமே பெரும்பான்மை வணிகம் மேற்கொண்டிருந்தனர் என்று அறிய முடிகிறது. மேலும், இவர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியச் செய்யுள்களில் மலிந்து காணப்படுகின்றன.

**“நன்கல வெறுக்கைத் துஞ்சும் பரந்தர்” - பதிற்று 7**

**“ பந்தர் பெயரிய பேரிசை மூதூர்” - பதிற்று 8**

அரபு நாட்டு வணிகர்கள் பெரும்பாலும் சேர நாட்டின் முசிறித் துறைமுகத்திலேயே வணிகம் மேற்கொண்டுள்ளனர். அவ்வாறு அவர்கள் வணிகம் மேற்கொண்ட பகுதியையே செய்யுளில் பந்தர் என்று குறிக்கப்படுகிறது[7]. பண்டையத் தமிழர்கள் கிழக்கத்திய தீவுகளுக்குச் சென்று அங்கிருந்து கொண்டு வந்த பொருள்களை அரபியர் இங்கு வந்து வாங்கி சென்றுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

கிரேக்க நாட்டவரும், ரோம் நாட்டவரும் அக்காலத்தில் யவனர் என்றே இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ளனர். தமிழ் நிலத்திற்கு வந்து வணிகம் மேற்கொண்ட பன்னாட்டு வணிகர்களுல் மிக முக்கிய வணிகக் குழுவாக யவனர்கள் கருதப்படுகிறார்கள்.

**“யவனர் நன்கலம் தந்த தன்கமழ் தேறல்” - புறம் 56: 18**

**“கடிமதில் வாயில் காவல்சிறந்த**

**அடல்வாள் யவனர்க்கு அயராது புக்கு” - சிலம்பு 66 – 67**

**“வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்” - முல்லை 59 – 61**

**“யவனர் தந்த வினைமான் நன்கலம்” - அகம் 149**

**“யவனர் இயற்றிய வினைமாண் பாவை” – நெடு 101 : 103**

இவ்வாறு சங்க இலக்கிய செய்யுட்களுல் யவனர் பற்றிய குறிப்புகள் மலிந்து காணப்படுகின்றன.

**இடைக்காலத் துறைமுகங்கள்**

சங்க காலத் துறைமுக நகரங்கள் யாவும் சங்கம் மறுவிய பின் கடல்கோளாலும், படையெடுப்புகளாலும் ஒன்றன்பின் ஒன்றாக அழிந்தன. இருப்பினும் தமிழர்களின் கடல்சார் பன்னாட்டு வணிகமானாது தொடர்ந்து நடைபெறும் வண்ணம் கடற்கரைகளில் துறைமுகங்கள் பின் வந்த அரசர்களால் உருவாக்கப்பட்டன. அவையாவும் இடைக்காலத் துறைமுகங்கள் என்று வரலாற்றில் குறிக்கப்படுகின்றன. நாகப்பட்டினம், சதுரங்கப்பட்டினம், காயல்பட்டினம், பெரியப்பட்டினம், கீழக்கரை, மரக்காயர் பட்டினம், தரகம்பாடி, தேவிப்பட்டினம், மரக்காணம், மயிலாப்பூர், மணமேல்குடி, கோவளம், அதிராம்பட்டினம், கோடியக்கரை, பழவேற்காடு ஆகியன முக்கிய இடைக்காலத் துறைமுகங்களாகும்.

**முடிவுரை**

பண்டைய தமிழகத்தின் வரலாற்றை ஆராயும்பொழுது, அதன் துறைமுகங்களும் பன்னாட்டு வணிகத் தொடர்புகளும் வெறும் பொருளாதாரப் பரிமாற்றங்களாக மட்டும் இல்லாமல், ஒரு நாகரிகத்தின் உச்சத்தை உலகிற்குப் பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன. 'திரைகடல் ஓடியும்

திரவியம் தேடு' என்ற பழமொழிக்கு ஏற்ப, பழந்தமிழர்கள் கடலைத் தங்கள் வாழ்வாதாரமாகவும், உலக நாடுகளுடனான இணைப்புப் பாலமாகவும் கருதினர். சங்க இலக்கியங்கள் காட்டும் புகார், முசிறி, கொற்கை போன்ற துறைமுகங்கள் அக்காலத்திலேயே ஒரு நவீன நகரக் கட்டமைப்போடு விளங்கியதை இக்கட்டுரை விரிவாக விளக்கியுள்ளது. பழந்தமிழர் நாகரிகம் என்பது மண்ணோடு மட்டும் பிணைந்தது அல்ல, அது அலைகளோடும் உறவாடியது. இன்று நாம் கொண்டுள்ள உலகளாவிய வணிகப் பார்வைக்கு வித்திட்டவர்கள் நம் முன்னோர்களே. தமிழகத்தின் இந்தத் தொன்மையான கடல் சார் அறிவையும், பண்பாட்டையும் போற்றிப் பாதுகாப்பதோடு, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வது நமது கடமையாகும்.

## References:

[1.] ஜெயக்குமார், பா. மணிமேகலை. பாரதி பதிப்பகம், பக். 312.

[2.] பெரிபுளூஸ்ஸின் எரித்திரியக் கடற்பயணக் குறிப்புகள். கேசிகன், புலியூர்க்.

[3.] முத்துசாமி, இரா. சங்க இலக்கியத்தில் கொற்கை முத்து. தமிழர் நாகரிகமும் பண்பாடும், வெற்றிச் செல்வன் வெளியீட்டகம், பக். 34. (ஆதாரம்: Agharam.wordpress.com)

[4.] தட்சிணாமூர்த்தி, அ. பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும். பூம்புகார் பதிப்பகம், 1999, பக். 112.

[5.] சிதம்பரனார், சாமி. பழங்காலத் தமிழர் வாணிகம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பக். 50.

[6.] வேங்கடசாமி, மயிலை சீனி.